Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 (11-12-65) இதழ் 302

விசுவாவசு கார்த்திகை 26 ஷஃபான் பிறை 17 சனிக்கிழமை




## கவுண்டா உறுதி

லுஸாகா, டிச. 10

கரீபா அணைக்கட்டை பாதுகாக்கும் பிரிட்டிஷ் துருப்புக்கள் அணையின் ரொடீஷியப் பகுதியிலும், ஸாம்பியா பகுதியிலும் நிலைகொள்ளாவிட்டால், பிரிட்டிஷ் துருப்புக்களை ஸாம்பியா ஏற்காது என ஜனதிபதி கவுண்டா உறுதியாகத் தெரிவித்திருக்கிறார்.

திருமலை நகரசபைத் தலைவர் மீது

# நம்பிக்கையில்லா பிரேரணை தோல்வி

## டாக்டர் சிவானந்தனை 5 அங்கத்தவர் ஆதரித்தனர்

திருக்கோணமலை, வெள்ளி

திருக்கோணமலை நகரசபைத் தலைவர் டாக்டர் எஸ்: சிவானந்தன் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப்பிரேரணை சாதகமாக நான்கு வாக்குகளும் பாதகமாக ஐந்து வாக்குகளும் பெற்றுத் தோல்வியடைந்தது. நம்பிக்கையில்லாப்பிரேரணை மீதான விவாதத்தில் தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளித்து டாக்டர் சிவானந்தம் உரைநிகழ்த்தி முடிந்து பிரேரணை தோல்வியடைந்ததும் அங்கத்தினரும் பொதுமக்களும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

நகரசபைத் தலைவர் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதிப்பதற்காக நகர சபையின் விசேஷ கூட்டம் இன்று காலை உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ரு. என். சிவராசா தலைமையில் நடைபெற்றது, நம்பிக்கையில்லாப் பிரேரணையை திரு ஸி. சோமசுந்தரம் பிரேரித்தார். திரு.எஸ். நடராசா அனுவதித்தார். திருவாளர்கள் எஸ். கே. சோமபாலா பி. நேமிநாதன் ஆகியோர் பிரேரணையை ஆதரித்தும் திருவாளர்கள் ஜி. லூக்காஸ், வி. கிருஷ்ணசாமி, பி. சித்திரவேலாயுதம் ஜனுப் எம். எஸ். ஏ. காதர் ஆகியோர் பிரேரணையைஎதிர்த்தும் பேசினர்.

பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டு சாதகமாக நான்கு வாக்குகளும் பாதமாக ஐந்துவாக்குகளும் பெற்றுத் தோல்வியடைந்தது.

இதன்பின் டாக்டர் சிவானந்தம் நன்றிதெரிவித்துப் பேசுகையில் தனது அரசியல் எதிரிகள் தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த நாள் முதல் தனக்கு எதிராகப் பொய்ப்பிரசாரம் செய்துவந்ததாகத் தெரிவித்தார்.

## சுழிபுரம் கிராமசபை தேர்தல்: 7 பேர் போட்டியின்றி தெரிவு!

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் கிராம சபைத் தேர்தல் நியமனம் இன்று தேர்தல் அதிகாரியால் சுழிபுரம் கிராம சபை அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மொத்தம் பதினாறு வட்டாரங்களையுடைய கிராமசபையில் ஏழு வட்டாரங்களில் போட்டியின்றி அங்கத்தவர் தெரிவு செய்யப்பட்டனர். போட்டியிடுவோர் விபரம் பின்வருமாறு:-

1-ம் வட்டாரம்- எம். சின்னப்பு, ஏ. ஜே. எம். மயில்வாகனம்.

2-ம் வட்டாரம்- ஏ. தையல்பாகர், கே. அரசரத்தினம், என். செல்லன்.

3-ம் வட்டாரம்- எஸ். ராதாக்கிருஷ்ணன், எம். கந்தன், எஸ். நரசிங்கம்.

4-ம் வட்டாரம்- கே. குமாரசாமி (போட்டியின்றித் தெரிவு)

5-ம் வட்டாரம்- பி. வைத்தியன், கே. மாதன், கே. சங்கரப்பிள்ளை,

6-ம் வட்டாரம்- பெ. விசுவநாதன் (போட்டியின்றித் தெரிவு)

7-ம் வட்டாரம்- சு. கந்தசுவாமி (தற்போதைய தலைவர்), மு. கந்தசாமி.

8-ம் வட்டாரப்- ஏ. நன்னித்தம்பி (போட்டியின்றித் தெரிவு)

9-ம் வட்டாரம்- சி. நல்லையா (போட்டியின்றித் தெரிவு)

10-ம் வட்டாரம்- எம். அருணசலம், ஏம். இராசையா.

11-ம் வட்டாரம்- அ. நடராசா (போட்டியின்றித் தெரிவு)

12-ம்வட்டாரம்- வி. மகாலிங்கம், சு. தம்பிநயினர், த. பொன்னுத்துரை.

13-ம் வட்டாரம்- க. நாராயணபிள்ளை (போட்டியின்றித்தெரிவு)

14-ம் வட்டாரம்- ரி. பொன்னையா (போட்டியின்றித் தெரிவு).

15-ம் வட்டாரம்- எஸ். கந்தையா, கே. கணேசரத்தினம், எம். செல்லத்துரை.

16-ம் வட்டாரம்- ரி. தம்பித்துரை, ரி. எஸ். துரைராசா, எம். இராசையா.

## மந்திரி ஹுருல்ல நாளை வருகிறார்

### புகையிரத நிலையங்களை பார்வையிடுவார்

யாழ்ப்பாணம், சனி

தேசிய அரசாங்கத்தின் போக்குவரத்து மந்திரி திரு. ஈ. எல். பி. ஹுருல்ல முதல் தடவையாக நாளைக்காலை மெயில்வண்டி மூலம் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை வந்தடைவார். யாழ்ப்பாண அரசாங்க அதிபர் வடமாகாண பாராளுமன்ற அங்கத்தவர்களும், மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களும், புகையிரதப் பகுதிஉத்தியோகத்தர்களும் மந்திரியைவரவேற்பார்கள்.

நாளைக்காலை 9 மணிக்கு மந்திரி கொடிகாமம் புகையிரத நிலையத்தைப் பார்வையிடுவார். காலை 10-45 மணிக்கு காங்கேசன்துறை புகையிரத நிலையத்தை பார்வையிடுவார், 11-30 மணிக்கு பலாலி விமானநிலையத்தைப் பார்வையிடுவார்.

நண்பகல் 12-30 மணிக்கு கொக்குவில், கோண்டாவில் புகையிரத நிலையங்களைப் பார்வையிடுவார். 1-30 மணிக்கு யாழ்ப்பாணம்வாடிவீட்டில் மத்தியான போசனம். பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தைப் பார்வையிடுவார்? மாலை 5-30 மணிக்கு யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி பரிசளிப்பு விழாவிற்கு தலைமை தாங்குவார். 7-30 மணிக்கு கல்லூரி அதிபரினுல் மந்திரிக்கு இரவு போசனம் அளிக்கப்படும். இரவு 8-45 மணிக்கு புகையிரத மூலம் கொழும்பு செல்வார்.

(ந. நி.)

## இன்று காங்கேசன்துறை பட்டினசபை தேர்தல்

### புதிய தேர்தல் சட்டப்படி நடைபெறும்

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன்துறைப் பட்டின சபையின் பொதுத் தேர்தல் நாளை நடைபெறவிருக்கின்றது. பட்டினசபையின் ஆறு வட்டாரங்களிலும் 15 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களில் ஐவர் தற்போதைய அங்கத்தினர்களாவர்.

பட்டினசபையின் தேர்தலையொட்டி அபேட்சகர்களின் பிரசாரங்கள்க் உச்சகட்டத்தை அடைந்துள்ளன. இத்தேர்தலில் 6500 வாக்காளர்கள் வாக்களிப்பார்கள். காங்கேசன்துறை பொலிஸ்பகுதி தேர்தலை அமைதியான முறையில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்துள்ளது. 50 பொலிசார் தேர்தல் சமயத்தில் கடமையாற்றுவர். 1-ம் வட்டாரத்திலும் 5-ம் வட்டாரத்திலும் ஆயுதம் தாங்கிய பொலிசார் நிறுத்தப்படுவர். ஏனைய வட்டாரங்களில் ஆயுதப் பொலிசார் 15 நிமிஷத்திற்கோர் தடவை ரோந்துபுரிவதற்கான முயற்சிகளும் செய்யப்பட்டுள்ளன.

புதிய தேர்தல் சட்டப்படி நடத்தப்படும் இத்தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களின் பெயர்களும் வாக்களிப்பு நிலையங்களும் வருமாறு:-

1-ம் வட்டாரம்: சு. கிருபாமூர்த்தி (தற்போதைய தலைவர்), அ. குமரகுரு. காங்கேசன்துறை சுங்க பண்டசாலை (ரேவடி)

2-ம் வட்டாரம்: ஆ. வ. சதாசிவம், சி. முருகையா, தி. செல்வராசா, காங்கேசன்துறை சிமிந்தித்தொழிற்

(2-ம் பக்கம்பார்க்க)

நகைகளுக்கு
யப்பான்
ஜுவலர்ஸ்
64, கன்னுதிட்டி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 518. தந்தி: 'யப்பான்'

## பஸ் சேவை

கொழும்பு, வெள்ளி

மேலும் 275 புதிய பஸ்கள் இலங்கை முழுவதிலும் புதிய பாதைகளில் விரைவில் சேவைக்குவிடப்படவிருக்கின்றன.

## தேசிய சுவீப் முடிவுகள்

பண்டாரவளை, வெள்ளி

நேற்று மாலை இங்கு இழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
79 P 0563 ரூ. 100,000

இரண்டாவது பரிசு
48 Q 0643 ரூ. 40,000

மூன்றுவது பரிசு
73 M 0076 ரூ. 10,000

2-ம் பக்கம் பார்க்க

## கணவனின் வழியை பின்பற்றிய மனைவி

### பிள்ளையின் பாசத்தால் இளம் தம்பதிகளின் பரிதாப முடிவு

யாழ்ப்பாணம், சனி

ஒருமாத காலத்துக்குமுன் கிருமிநாசினி அருந்தித் தற்கொலைசெய்துகொண்டகணவனின் பிரிவைத் தாங்காத 23 வயதான இளம் விதவை தனது தாயாரிடம் அடிக்கடி கணவன் சென்ற இடத்திற்குத் தானும் போகப் போவதாகப் பயமுறுத்திய பின் கணவனின் அந்தியட்டியன்று தன் ஒரு வயது நிரம்பாத குழந்தையை விட்டுவிட்டுக் கணவன் கையாண்ட வழியைப் பின்பற்றி கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்ட பரிதாபகரமான சம்பவமொன்று மண்டைதீவில் நிகழ்ந்துள்ளது.

இச்சம்பவத்தைப் பார்த்துக்கொண்டிருந்த அயல் வீட்டுக்காரர், அப்பெண்ணின் உயிரைக் காப்பாற்றும்பொருட்டு உடனடியாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது. மண்டைதீவில் அப்போது

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

என்றைக்காவது ஒரு நாள் சமத்துவ லட்சியத்தை அடையப்போகிறோமென்றால் அதற்கு இப்பொழுதே அஸ்திபாரமிடவேண்டும். திடீரென்று ஒருநாள் காலை அது ஆகாயத்திலிருந்து குதித்துவிடப்போவதில்லை. எல்லோரும் ஒன்றுபட்டுத் தாமாகவே முயற்சிசெய்து படிப்படியாக அதைக்காட்டவேண்டும். —மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49 JAFFNA
Telegrams: EELA NADU Jaffna Phone: 187

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆ... கார்த்திகை 26 (11-12-65)

# ஆசிரியர் இடமாற்றம்

ஆசிரியர்கள் பலருக்கு இடமாற்ற உத்தரவுகள் கிடைத்துள்ளன. இடமாற்ற உத்தரவுகிடைத்த ஆசிரியர்கள் குறிப்பாக வடபகுதியிலுள்ள தமிழாசிரியர்களும் அவர்களினது சங்கங்களும் இடமாற்றத்தை வன்மையாக எதிர்க்கின்றனர். ஆட்சேபக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் ஆகியவைகளுக்கும் அவர்கள் ஏற்பாடுசெய்துவருகின்றனர்

இடமாற்றத்தை தாங்கள் எதிர்க்கவில்லை என்றும் அரசாங்கம் தனது நிர்வாகத்தின்கீழ் எடுத்துக்கொண்ட பாடசாலை ஆசிரியர்களின் பிரச்னைகளுக்கு ஒரு தீர்வுகாணப்படவேண்டியதுடன் தமிழாசிரியர்களின் இதர பிரச்னைகளுக்கும் ஒரு தீர்வுகண்டு, நிரந்தரமான, எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு இடமாற்றத் திட்டத்தையும் தயாரிக்கவேண்டுமென்றும் அதன்பின்னரே தமிழாசிரியர்களை இடமாற்றம் செய்யவேண்டும் என்று அவர்கள் கூறுகின்றனர். தென்னிலங்கையில் தமிழாசிரியர் பற்றாக்குறைகாரணமாக தமிழ்ப் பாடசாலைகள் மூடப்படுவதற்கோ, தமிழ் வகுப்புக்கள் மூடப்படுவதற்கோ தாங்கள்பொறுப்பல்லவென்றும், ஆசிரியர் இடமாற்ற விஷயத்தில் அரசியல் வாதிகள் தலையிட்டுவந்ததே இதற்குக் காரணம் எனவும் ஆசிரியர் சங்கம் ஒன்று குற்றம் சாட்டியுள்ளது.

வடமாகாணத்துக்கு வெளியேயுள்ள தமிழாசிரிய சங்கங்கள் பல, வடமாகாணத்திலிருந்து தமிழாசிரியர்களைதென்னிலங்கைக்கு இடமாற்றம் செய்வதை வரவேற்றுப் பாராட்டியுள்ளன. நீண்டகாலமாக வடமாகாணத்துக்கு வெளியே ஆசிரியத்தொழில்புரிந்துவரும் தமிழாசிரியர்களுக்கு, தங்கள் சொந்த ஊரிலும் சிலகாலம் பணிபுரிய சந்தர்ப்பமளிக்க வேண்டுமென்று அவர்கள் கேட்கின்றனர். அரசியல்வாதிகளின் தலையீடுதான் ஆசிரியர் இடமாற்றப் பிரச்னையாக உருவெடுத்துள்ளதற்கு முக்கிய காரணமென அவர்களும் குறை கூறுகின்றனர்.

சில தினங்களுக்கு முன் தமிழ் எம். பி. ஒருவர் விடுத்திருந்த அறிக்கையில், ஆசிரியர் இடமாற்ற விஷயத்தில் தாங்கள் தலையிடுவதில்லையென்றும் தமிழ் மக்களின் நலனைப் பாதிக்கக்கூடிய சந்தர்ப்பம் வந்தால் தமிழ்மக்களின் நலனுக்காக, ஆசிரியர் இடமாற்ற விஷயத்தில் தாங்கள் தலையிடும்உரிமையை இழந்துவிடவில்லைஎன்றும் குறிப்பிட்டிருந்தார்.

ஆசிரியர்களின் இடமாற்றத் திட்டம் பற்றி கல்வி மந்திரி சமீபத்தில் விளக்கம் தெரிவித்து எம். பி.க்களுக்கு அனுப்பிய ஒரு செய்தியில் டமாற்றத்தை அமுல்நடத்த உதவியும் ஒத்துழைப்பும் அளிக்குமாறு கோரியிருந்தார். இடமாற்றத்தை ஆட்சேபித்து மனுச்செய்யவும், இந்த மனுவை விசாரணைசெய்யவும்விசாரணைக் குழுக்களை நியமிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

ஆனால் நேற்று முன் தினம் யாழ்ப்பாணத்தில் வடபிரதேச உதவி வித்தியாதிபதி மற்றும் கல்வி இலாகா உயர் அதிகாரிகளுடன் தமிழ் எம். பி.க்கள சிலர் பேச்சுவார்த்தை நடத்தி தமிழாசிரியரின் இடமாற்றம் பற்றிச் சில யோசனைகளைத் தெரிவித்தனராம். இந்த யோசனைகள் ஆசிரியர்களுக்குச் சாதகமானதாயிருப்பினும்சரி, பாதகமாயிருப்பினும்சரி இடமாற்ற விஷயத்தில் தலையிடமாட்டோம் எனக்கூறிவிட்டு, இதில் யோசனை தெரிவித்தது தலையீடல்லவா? இடமாற்றம் ஆசிரியர்களுக்கு மட்டும் உரிய பிரச்னையல்ல. அரசாங்கசேவையிலுள்ள ஊழியர் அனைவரும் பெரும்பாலும் இடமாற்றத்துக்கு உட்பட்டவர்கள். சேவையில் சேரும் பொழுதே இந்த நிபந்தனையை ஏற்றுக்கொண்டுதான் சேர்கிறார்கள். அவர்கள் நான்கு வருடம் அல்லது மூன்று வருடம் என ஒரு கால எல்லை இடமாற்றத்துக்கென விதிக்கப்பட்டுள்ளது. அவர்களின் இடமாற்ற விஷயம் பெரிய பிரச்னையாக உருவெடுப்பதுமில்லை; அரசியல்வாதிகளின் தலையீடும் அதிகம் இருப்பதுமில்லை. ஆசிரியர் இடமாற்றம் மட்டும் பிரச்னையாக உருவெடுப்பதும், அரசியல் தலையீடு இடம்பெறுவதும் ஏன்? ஆசிரியர் இடமாற்றம் பாடசாலை ஆசிரியர் தேவைகளைப் பொறுத்தும், மாணவரின் கல்வியைப் பொறுத்தும் இருக்கவேண்டும். இவர்களின் இடமாற்றம் அரசியல் தலையீடோ நோக்கமோ இன்றிக் கல்வி இலாகாவினால் நிர்வாகத்துக்குட்பட்ட முறையில் நடைபெறவேண்டும். இதேசமயம் இன்று எம். பி.க்களின் தலையீடுபற்றிக் குறைகூறும் ஆசிரியர்கள்- தமிழாசிரியர்கள் -அரசியல் தலையீட்டுக்கு தாங்களும் காரணமாக இருந்துவந்துள்ளனர் என்பதையும் இன்னும் சிலர் காரணமாக உள்ளனர் என்பதையும் மறுக்கமுடியாது. இடமாற்ற உத்தரவு கிடைத்தவுடனும், தாம் விரும்பும் இடத்துக்கு இடமாற்றம்பெற விரும்பினாலும் எம். பி.யின் உதவியை நாடி, அவர் பின்னால் கல்விக் கந்தோர்வரை சென்று திரும்புவதையும் யாரும் மறுக்கமுடியாது. ஆசிரியர் நியமனம், இடமாற்றம் எம். பி.யின் ஒரு முக்கிய கடமையாக ஆசிரியர்களும், எம். பி.க்களும் கருதும் முறை என்று இந்நாட்டிலிருந்து ஒழிகிறதோ அன்று அவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், இந்நாட்டின் கல்வித்துறைக்கும் விடிவுகாலமேற்படும். இனியாவது ஆசிரியர்கள் தங்கள் விஷயத்தில் அரசியல் வாதிகளின் உதவியை நாடாமலும், ஆசிரியர்கள் விஷயத்தில் தலையிடாமலும் இருக்கவேண்டும். கல்விப்பகுதியினர் நியாயமான முறையில் ஆசிரியர்களின் இடமாற்றத்துக்கான ஒழுங்குகளைச் செய்யவேண்டும். ஆசிரியர்களும் தங்கள் இடமாற்றத்தைஎதிர்த்து நடத்த உத்தேசித்துள்ள ஆர்ப்பாட்டங்களையும் கூட்டங்களையும் மாணவர்களுக்கு வழிகாட்டக்கூடிய முறையில் கண்ணியமாகவும், கௌரவமாகவும் நடத்தவேண்டும். எந்த இயக்கமும் வெற்றிபெறத் தமக்குள் ஒற்றுமை அவசியமென்பதையும் ஆசிரியர்கள் உணரவேண்டும்.

# 'பரந்தனுக்கு நவீன புகையிரத நிலையம் தேவை'

## கி. மு. சங்கத்தீர்மானம்

யாழ்ப்பாணம், வியா. கரைச்சி மாவட்டத்தின் ஒரு முக்கிய இடமாகவும், முல்லைத்தீவு, பூனகரி, யாழ்ப்பாணம், கொழும்பு வீதிகள் சந்திக்கும் ஒரு பிரதான இடமாகவும் பரந்தன் இருப்பதால், அங்கு நவீன புகையிரத நிலையம ஒன்று அமைத்துத் தருமாறு போக்குவரத்து மந்திரி திரு. ஈ. எல். பி. ஹுருல்லையைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் பரந்தன்-குமரபுரம் கிராமமுன்னேற்றச் சங்கக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

குமரபுரம் பாடசாலை மண்டபத்தில் திரு. கே. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மேற்கண்ட தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இரணைமடு, கல்மடு குடியேற்றத் திட்டத்தின்கீழ் இப்பகுதி துரித முன்னேற்றம் அடைந்துவருகிறது. இரசாயனத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம் ஆகிய பிரதான தொழிற்சாலைகள் இங்கு இடம்பெற்றுள்ளதோடு, பல அரசாங்க இலாகாக்களும் இங்கு நிறுவப்பட்டுள்ளன. இப்பகுதிகளிலுள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகள், தொழிலாளர் நன்மையைக் கருதி பரந்தனில் நவீன புகையிரதநிலையம் அவசியம் அமைக்கப்படவேண்டும்.

மேற்கண்ட தீர்மானத்தை திரு. கே. இராமச்சந்திரன் பிரேரிக்க, திரு. வி. சுப்பிரமணியம் அனுமதித்தார். இத்தீர்மானத்தை ஆதரித்து அங்கத்தவர்கள் பேசினார்கள்.

கிளிநொச்சிப் பகுதியிலிருந்து நூற்றுக்கணக்கான மக்கள் தினமும் யாழ்ப்பாணம் செல்வதால், தற்பொழுது பளை வரையிருக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டு புகையிரத சேவையை கிளிநொச்சிவரை விஸ்தரிக்கும்படி போக்குவரத்து மந்திரியைக் கேட்டுக்கொள்ளும் மற்றோர் தீர்மானமும் நிறைவேறியது.

போயா தினங்களில், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு உத்தரதேவியைச் சேவைக்கு விடும்படியும், இதனால் இப்பகுதியில் மட்டுமின்றி யாழ்ப்பாணத்திலுமிருந்தும் பௌத்த யாத்திரிகர்கள் அனுராதபுரம், மிகிந்தலை மற்றும் புனித ஸ்தலங்களுக்குச் செல்ல வசதியாயிருக்குமென்றும் மந்திரியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

காங்கேசன்துறைக்கும், கிளிநொச்சிக்குமிடையில் புகையிரத சேவையைப் பலப்படுத்தும் விதத்தில் மக்களின் வசதிக்கேற்றபடி மேலதிக சேவையை ஏற்படுத்துமாறு கோரும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

## இன்று...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாலையின் பாதுகாப்புக் கட்டிடம்.

3-ம் வட்டாரம்: மு. திடவீரசிங்கம் (தற்போதைய அங்கத்தவர்), இ. குருசாமி. சிமிந்தித் தொழிற்சாலைக்கு எதிராகவுள்ள தற்காலிகக் கொட்டில்.

4-ம் வட்டாரம்: டாக்டர் சு. வே. சீனிவாசகம் (தற்போதைய அங்கத்தினர்), சி. நாகரத்தினம். தையிட்டி கணேசவித்தியாசாலை.

5-ம் வட்டாரம்: ச. சிவனடியார் (த. அங்கத்தவர்). வி. இரத்தினராஜா (த. அங்கத்தவர்). ம. மரியாம்பிள்ளை. 5 ம் வட்டாரத்தில் மயிலிட்டிக்கரை கிராம சேவையாளரின் பிரிவைச் சேர்ந்த காங்கேசன்துறை-பருத்தித்துறை வீதியின் வடபக்கத்தேயுள்ள ஒபயசேகரா இல்லம்.

6-ம் வட்டாரம்: பி. இமானுவேல், சி. இராமநாதன், இ. மரியதாஸ். மயிலிட்டி றோ. க. பாடசாலை.

## தேசிய சுவீப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா ரூபா 2, 826 பரிசுபெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 30 D 0203 | 78 Q 0460 |
| 53 N 0082 | 20 D 0550 |
| 30 P 0022 | 68 A 0565 |
| 46 L 0493 | 07 O 0589 |
| 79 W 0350 | 80 F 0330 |
| 17 J 0643 | 30 D 0649 |
| 24 M 0584 | 94 G 0509 |
| 44 N 0709 | 36 X 0136 |
| 46 S 0873 | 19 L 0049 |
| 78 J 0963 | 67 G 0327 |
| 81 A 0147 | 02 W 0483 |
| 62 E 0286 | 68 A 0410 |
| 06 N 0508 | 09 U 0116 |
| 88 J 0133 | 32 K 0779 |
| 63 P 0954 | 24 G 0614 |
| 05 N 0119 | 78 B 0275 |
| 81 C 0105 | 53 A 0267 |
| 77 O 0331 | 70 M 0271 |
| 41 Q 0752 | 11 H 0638 |
| 25 H 0136 | 15 N 0804 |
| 38 Q 0857 | 25 K 0962 |
| 82 P 0921 | 41 F 0330 |
| 35 Q 0292 | 39 P 0836 |
| 12 V 0485 | 86 B 0569 |
| 11 F 0839 | 60 B 0227 |
| 85 U 0909 | 31 A 0465 |
| 98 N 0032 | 46 N 0038 |
| 93 C 0797 | 56 C 0547 |
| 09 G 0159 | 62 L 0012 |
| 24 O 0690 | 41 W 0772 |
| 59 M 0809 | 96 K 0263 |
| 33 B 0270 | 72 P 0493 |
| 06 W 0872 | 48 F 0748 |
| 58 V 0645 | 01 J 0200 |
| 20 X 0459 | 73 R 0370 |
| 74 A 0694 | 62 V 0223 |
| 71 C 0262 | 73 N 0560 |
| 27 G 0065 | 38 P 0386 |
| 72 B 0268 | 39 O 0342 |
| 74 C 0684 | 53 H 0706 |
| 35 D 0006 | 14 Y 0693 |
| 77 K 0400 | 81 F 0633 |
| 73 D 0496 | 97 G 0576 |
| 06 S 0369 | 91 J 0238 |
| 08 D 0560 | 63 J 0832 |
| 43 D 0355 | 93 E 0152 |
| 12 L 0108 | 49 K 0360 |
| [illegible] D 0300 | 72 L 0430 |
| 56 W 0886 | 26 V 0326 |
| 53 G 0343 | 18 E 0176 |

## நாடும் நடப்பும்

கொழும்பு மாநகரசபை எல்லைக்குள்ளிருக்கும் படமாளிகைகளிலும், கொழும்பு நகர பஸ்களிலும் புகைபிடிப்பதைத் தடைசெய்வதென்று கொழும்பு மாநகர சபை ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. எப்பொழுதோ செய்திருக்கவேண்டிய இந்த நல்ல காரியத்தை இப்பொழுதாவது செய்ய முன்வந்துள்ள தலைநகர பிதாக்களைப் பாராட்ட வேண்டும். புகைபிடிக்கும் பழக்கமுள்ளவர்களை புகைபிடிக்க வேண்டாமென்றுதடைடவிதிக்க வேண்டாமென்று யாரும் கேட்கவில்லை. புகைபிடிக்காதவர்களின் சுதந்திரத்தை நசுக்கி, உபத்திரவம் கொடுக்கவேண்டாம் என்றுதான் கேட்கிறார்கள். கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலுமுள்ளசிலசினிமாத் தியேட்டர்களில் படம் தொடங்க முன்னர் ''தயவு செய்து புகைபிடிக்காதீர்கள் என்று 'தயவுடன்' கேட்கிறார்கள். ஆனால் இடைவேளையின் போது அத்தியேட்டர்களுக்குள்ளேயே பீடி, சிகரெட், சுருட்டு முதலிய 'புகைவஸ்துக்களை' தாராளமாக விற்க அனுமதிக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் தியேட்டர்களில் புகைபிடிக்கமட்டுமல்ல, புகைச்சரக்குகளை விற்பனை செய்யவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. தடையை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது. கொழும்பு மாநகரசபை தனது தீர்மானத்தை எப்படி நிறைவேற்றுகிறதோ பார்க்கலாம்.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணத்தில் உள்ள தியேட்டர்களில் ஒன்றிரண்டைத்தவிரஆசன வசதியோ மற்றும் வசதிகளோ கிடையாது. இந்த லட்சணத்தில் புகைமண்டலமும் அதிகம். பல தடவைகளிலும் இது பற்றிப் பலரும் குறைகூறியுள்ளனர். தியேட்டர்கள் பற்றிஆராய்ந்து அவற்றைச் சீர்திருத்துவதற்கான நடவடிக்கைகளைச் சிபர்சுசெய்ய மாநகரசபை அங்கத்தவர் சிலரைக் கொண்ட உபகுழுவொன்று நியமிக்கப்பட்டதாக ஞாபகம். உபகுழு என்ன செய்ததோ யாமறியோம். கொழும்பு மாநகர சபை காட்டியுள்ள முன்மாதிரியை நமது நகரபிதாக்களும் பின்பற்றினால் நல்லது.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாண நகரவீதிகள், மழைக்குப்பின், சமூகத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளை எடுத்துக்காட்டுவது போல் மேடுபள்ளமாகக் காட்சியளிக்கின்றன. நாளை இங்கு வரும் போக்குவரத்து மந்திரியை நமது மேயரும் அங்கத்தவர்களும் மாட்டுவண்டியில் இந்த வீதிகள் வழியாக அழைத்துச் சென்றால் மந்திரியும் நமது நகர பிதாக்களும் மக்களின் கஷ்டங்களை அனுபவத்தில் உணரமுடியும்.

--ஊர்சுற்றி

## விண்வெளியில்

கேப்கென்னடி, டிச. 10

6 நாட்களாக விண்வெளி யாத்திரையில் ஈடுபட்டிருக்கும் 'ஜெமினி 7' அமெரிக்க வின்வெளி விமானிகள் தங்கள் பாதையை வெற்றிகரமாக மாற்றியிருக்கிறார்கள். அடுத்த ஞாயிற்றுக்கிழமை அனுப்பப்படவிருக்கும் 'ஜெமினி 6' விண்வெளிக் கப்பலைச் சந்திக்குமுகமாக பாதை மாற்றப்பட்டது. விமானிகளில் ஒருவருக்கு சளி பிடித்திருப்பதாயும், பலமுறை அவர் தும்மினார் என்றும் அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிக்கோயன் ராஜினமா

## பொட்கோர்னி ரஷ்யாவின் புதிய ஜனதிபதியாகத் தெரிவு

மாஸ்கோ, டிச. 10

சோவியத் ஜனதிபதி மிக்கோயன் ராஜினமாச் செய்துவிட்டார். 70 வயதான மிக்கோயன், உடல்நலக் குறைவு காரணமாக ராஜினமாச் செய்திருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக் காரியதரிசி திரு. பொட்கோர்னி புதிய ஜனதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிருர். அவருக்கு வயது 62.

இதற்கு முன் சோவியத் துணைப் பிரதமர் திரு. ஷெல்பின் பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டார். கட்சி வேலைகளில் அதிக கவனம் செலுத்துமுகமாக அவர் விடுவிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

திரு. மிக்கோயன் சென்ற ஆண்டுதான் ஜனதிபதியானுர். அப்போது ஜனதிபதியாக இருந்த பிரஸ்னேவ், ராஜினமாச் செய்து கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றதைத் தொடர்ந்து மிக்கோயன் ஜனதிபதியானுர்.

இந்திய ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், திரு மிக்கோயனுக்கு அனுப்பிய செய்தியில், "சோவியத் யூனியனுக்கு ஆயுட்காலம் முழுதும் சேவை செய்த தங்களுக்கு ஓய்வுபெற உரிமையுண்டு" எனக் கூறியிருக்கிருர். புதிய ஜனதிபதி பொட்கொர்னிக்கும் அவர் வாழ்த்துச்செய்தி அனுப்பியிருக்கிருர்.

### இளவரசி திருமணம்

ஹேக், டிச. 10

ஹாலந்து இளவரசி பீட்ரிக்ஸுக்கும் மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த கிளாஸ் வொன் ஆம்ஸ்பெர்க்குக்குமிடையே வருகிற மார்ச் 10-ம் திகதி திருமணம்நடைபெறும் என தாய் ஜூலியாஞ ராணியும், தந்தை பெர்ஞட் இளவரசரும் அறிவித்திருக்கிருர்கள்.

### இந்தோனேஷியா பேசத் தயார்?

ஜாகர்த்தா, டிச, 10

மலேஸியத் தகராறைத் தீர்க்க இந்தோனேஷியா பேச்சு தொடங்கும் என வெளிநாட்டு மந்திரி டாக்டர் சுபந்திரியோ கூறினர். ஆனல் எப்போது, எந்தமட்டத்தில் என அவர்குறிப்பிடவில்லை. இந்தோனேஷியாவின் அறிவிப்பு வியப்பளிப்பதாக பார்வையாளர்கள் கூறுகின்றனர்,

### மிக முக்கிய பேச்சு

வாஷிங்டன், டிச. 10

ஜனதிபதிஜோன்ஸனுக்கும், பாகிஸ்தான் அதிபர் அயூப்கானுக்குமிடையே நடைபெறவிருக்கும் பேச்சுக்கள் பெரும் முக்கியத்துவம் கொண்டதாய் இருக்குமென அமெரிக்க வெளிநாட்டுமந்திரி திரு.டீன் ரஸ்க் இங்கு கூறினர். அமெரிக்க-பாகிஸ்தான் உறவுகள் இப் பேச்சில் முற்ருகப் பரிசீலிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. திரு. ஜோன்ஸனைச் சந்திக்கும்பொருட்டு அதிபர் அயூப் இன்று லண்டன் புறப்பட்டார்.

### தர்மகர்த்தா சபை தீர்மானம்

ஐ. நா. டிச. 10

தென்மேற்கு ஆபிரிக்காவிலுள்ள ராணுவத் தளங்களை அகற்றுமாறும், அந்தநாட்டுக்கு சுயநிர்ணய உரிமை வழங்குமாறும் ஐ. நா. தர்மகர்த்தா சபை தீர்மானம் ஒன்றின் மூலம் தென்னபிரிக்காவைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. தீர்மானத்துக்கு சாதகமாக 83 வாக்குகளும் எதிராக 2 வாக்குகளும் கிடைத்தன. 15 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. தீர்மானம் இனி பொதுச்சபைக்குப் போகும்.

### நிராகரிப்பு

புதுடில்லி, டிச. 10

கமல பொலிஸ் பகுதியில் பாகிஸ்தான் பிரயாணிகள் ரயில்மீது இந்தியத் துருப்புக்கள் சுட்டதாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டை இந்தியா நிராகரித்திருக்கிறது.

வடவியட்னமில் அகோர தாக்குதல்

## பீகிங், ஹானேய்க்கு அமெரிக்க தலைவர்கள் கடும் எச்சரிக்கை

### அமெரிக்காவை கண்டித்து ரஷ்ய பார்லிமெண்டில் தீர்மானம்

### வடவியட்னமில் 120 இடங்களில் தகவல் தொடர்புகள் படுநாசம்

வாஷிங்டன், டிச. 10

வியட்னமில் அமைதியை ஏற்படுத்த நிபந்தனையற்ற பேச்சுக்கு அமெரிக்கா தயாராய் இருக்கிறதென்றும், இக்கடைசி நேரத்திலாவது சீனவும், வடவியட்னமும் அதற்குத் தயாராய் இருக்குமென நம்புவதாயும் ஆனல் போரை நீடித்தால் வியட்னமில் வேறு கடும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமென்றும் அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸன் எச்சரிக்கை விடுத்திருக்கிருர்.

ஆனல் எத்தகைய கடும் நடவடிக்கை என்பதைஅவர் குறிப்பிடவில்லை.

வெளிநாட்டு மந்திரி ரஸ்க் விடுத்த மற்ருேர் எச்சரிக்கையில் வியட்னம் சண்டையில் சீன குதிப்பதை அமெரிக்கா பொருட்படுத்தாது என்றும், தென் வியட்னமில் தனது கடமைப் பொறுப்புக்களை அமெரிக்கா உறுதியுடன் நிறைவேற்றும் என்றும் கூறினர்.

வடவியட்னமுக்கு சீன உதவி புரிந்துவருகிறதென்றும் அவர் நிருபர் மகாநாட்டில் கூறினர்.

சோவியத்பிரதமர் கோஸிஜின் வியட்னம்சம்பந்தமாக அமெரிக்கா மீது குற்றம் சாட்டியது அங்கு சமாதானத்தை ஏற்படுத்துவதில் உதவிபுரியமாட்டாது என்றும் ரஸ்க்தெரிவித்தார்.

### பிரிட்டிஷ் யோசனை

வியட்னம் பிரச்னையைத் தீர்க்க கமிஷனிலுள்ள இந்தியா, கனடா, போலந்து ஆகிய நாடுகளையும், 1954ம் ஆண்டு ஜெனிவா மகாநாட்டில் பங்கு பற்றிய இதர 9 நாடுகளையும் கொண்ட மகாநாட்டைக் கூட்ட வேண்டுமென்ற பிரிட்டிஷ் யோசனையை அமெரிக்கா ஆதரித்திருக்கிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

உடன் 15 லட்சம் டன் கோதுமை:

## இந்தியாவுக்கு ஜோன்சன் அவசர உதவி

வாஷிங்டன், டிச. 10

இந்தியாவுக்கு 15 லட்சம் டன் கோதுமையை உடனடியாக அனுப்புமாறு ஜனதிபதி ஜோன்ஸன் உத்தரவிட்டிருக்கிருர். அமெரிக்காவிடமிருந்து ரசாயன உரம் பெற்றுக்கொள்வதற்காக 5 கோடி டாலர் இந்தியாவுக்கு கடனளிக்கவும் அவர் அங்கீகாரமளித்திருக்கிருர். இந்தியாவின் உணவு நெருக்கடியைத் தீர்க்க உதவுவதில் உணவு உற்பத்தி நாடுகள் சர்வதேச முயற்சியை மேற்கொள்ள வேண்டும் எனவும் ஜோன்ஸன் வேண்டுகோள் விடுத்திருக்கிருர்.


## எச்சரிக்கை

### இந்த அறிவித்தல்

### பொது மக்களின் நலனை முன்னிட்டு வெளியிடப்படுகின்றது

எமது ஏஜென்டு அல்லது விற்பனைப் பிரதிநிதி என உரிமை பாராட்டும் எவரிடமும் எமது கையொப்பம் தாங்கிய அடையாள அட்டையைக் காண்பிக்குமாறு கேட்கும்படி பொதுமக்களை வேண்டிக்கொள்கிருேம். அடையாள அட்டையைக் காண்பிக்கத்தக்க நிலையிலிருக்கும் விற்பனைப் பிரதிநிதிகள் மாத்திரமே ஓடர்கள் பதிவுசெய்து கொழும்பிலுள்ள எமது கவனத்துக்கு அனுப்பிவைக்கும் அங்கீகாரம் பெற்றவர்களாவர். அங்கீகாரமின்றி எமது சார்பில் செயலாற்றுவதாக உரிமை கொண்டாடும் எவரும் பொய் வேடம் புனைந்து ஏமாற்றுபவராகவே இருப்பார்.

பொதுமக்களின் நலனை உத்தேசித்தே இந்த விளம்பரம் பிரசுரிக்கப்படுகின்றது. ஏனெனில் யாரோ ஒருவர் இலங்கையின் பல்வேறு பாகங்களிலுமுள்ள வியாபாரிகளையும் விற்பனையாளர்களையும் சந்தித்து தாம் இந்தக் கம்பனியின் விற்பனைப் பிரதிநிதி என்று சொல்லி ஆள்மாருட்டம் செய்ததுமல்லாமல், இக்கம்பனியின் ஏஜென்டுகளாக அல்லது உப-ஏஜென்டுகளாகப் பிறரை நியமிப்பதற்கு ஏற்பாடுகள் செய்துகொடுப்பதாக வாக்குறுதியளித்துள்ளதாகவும் எமக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. உண்மையில் இக்கம்பனியின் அங்கீகாரம்பெற்ற விற்பனைப் பிரதிநிதிகளுக்குக்கூட இத்தகைய நியமனங்கள் செய்வதற்கு அனுமதி கிடையாது. சன்டோரொக்ஸ், இன்ரொக்ஸ் 8, எகாரொக்ஸ் ஆதியன போன்ற எமது விவசாய ரசாயனப் பொருள்களை தமது சொந்த வாகனத்தை உபயோகித்து கொள்ளை லாப விலைக்கு வியாபாரிகளுக்கும் விற்பனையாளர்களுக்கும் இந்த நபர் விற்பனைசெய்துமிருக்கிருர். கல்முனை, வவுனியா, உயிலங்குளம், ஜாஎல, அளவெட்டி, கெபிட்டிகொல்லவ, செங்கலடி, புத்தள, அச்சுவேலி, பொத்துவில், செம்பியந்தலாவ, பொலனறுவை, கிளிநொச்சிஆகிய இடங்களிலுள்ள விற்பனையாளர்கள் இந்த ஆள்மாருட்ட நடவடிக்கை பற்றி எமக்கு முறைப்பட்டிருக்கிருர்கள்.

மேற்குறித்த வகையில் எவராவது செயலாற்ற முற்படும் சமயங்களிலெல்லாம் அன்னரின் பெயர் விலாசம் முதலிய விவரங்களைப் பெற்று, எமக்கு அனுப்பிவைக்கும்படி பொதுமக்களைக் கேட்டுக்கொள்கிருேம்.

தற்சமயம் இலங்கையின் எந்தப் பாகத்திலேனும் எமது விவசாய ரசாயனப் பொருள்கள் வான்களில் விநியோகிக்கப்படுவதில்லை; அங்கீகாரம் பெற்ற எமது விற்பனைப் பிரதிநிதிகள் எவரும் ரொக்கப் பணத்துக்குக் கொடுக்கவென்று எந்த வகை விவசாய ரசாயனப் பொருளையும் கொண்டுசெல்வதுமில்லை. அவர்கள், ஓடர்களைப்பதிவுசெய்து எமக்கு அனுப்பிவைக்க, நாம் கொழும்பிலிருந்து பொருள்களை அனுப்புவோம்.

விவசாய ரசாயனப் பொருள்கள் உரவகைகள், மற்றும் பொருள்கள், சம்பந்தமான வர்த்தக விசாரணைகள் யாவும் எமக்கு நேரடியாகவோ, அங்கீகாரம் பெற்ற எமது விற்பனைப் பிரதிநிதிகள் மூலமாகவோ அனுப்பப்படல்வேண்டும்.

## ஏ. பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்

பரந்துபட்ட வகையான விவசாய ரசாயனப் பொருள்கள், கிருமிநாசனிகள், களைநாசனிகள், தெளி கருவிகள், தூவு கருவிகள், உரவகைகள் ஆகியவற்றை அதிசிக்கனமான விலைக்குப் பெறக்கூடிய ஸ்தாபனம்.

5, மேல் சதாம் வீதி
த. பெ. 11, கொழும்பு.

Advt.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பீகிங், ஹானேய்க்கு...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சண்டையை நிறுத்தும்படியும், பேச்சுவார்த்தை நடத்தும்படியும் வடவியட்னமைக் கேட்குமாறு பிரிட்டன் மேற்கண்ட 12 நாடுகளுக்கும் யோசனை கூறியிருக்கிறது.

### ரஷ்யா கண்டனம்

இதற்கிடையே வியட்னமில் அமெரிக்கா ஆக்கிரமிப்புச் செய்திருப்பதாய் சோவியத் பார்லிமெண்ட் நேற்று தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

இதற்குமுன் வெளிநாட்டு மந்திரி குரோமிக்கோ பேசுகையில், வியட்னமிலிருந்து அமெரிக்கத் துருப்புக்கள் முற்றாக விலக வேண்டும் என்பது உட்பட, வடவியட்னமின் 4 நிபந்தனைகளையும் தீர்வுக்கு அடிப்படையாக ரஷ்யா மதிக்கிறது எனக் கூறினார். வடவியட்னமுக்கு ரஷ்யா தொடர்ந்து உதவியளித்துவரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

### அகோரத் தாக்குதல்

இதற்கிடையில் நேற்று 140 அமெரிக்க விமானங்கள் வடவியட்னமில் இதுவரை இல்லாதபடி கடும் தாக்குதல் நடத்தியதாயும், ஹனோய்க்கு அருகிலும் தாக்குதல் நடத்தப்பட்டதென்றும், இதன் விளைவாக 120 இடங்களில் தகவல் தொடர்புகள் படுநாசமடைந்ததாயும் அறிவிக்கப்பட்டது.

தென் வியட்னமில் சைகோனுக்கு வடகிழக்கே அமெரிக்க, தென்வியட்னமிய விமானங்கள் வியட்காங் இலக்குகள் மீது மற்றோர் கடும் தாக்குதலை மேற்கொண்டன என்றும், இங்கு நடைபெறும் சண்டையில் இருதரப்பிலும் கடும் ஆள் சேதம் ஏற்பட்டதாயும் மேலும் அறிவிக்கப்பட்டது.

## 13வது கபபல்

விசாகபடடணம், டிச 10

விசாகபட்டணத்தில் கட்டப்பட்ட ''ஸ்டேட் ஆப் மைசூர்'' என்ற 13வது கப்பலை சென்னை கவர்னர் ஜெய சாமராஜ உடையார் மிகக்க விட்டாா.

## எங்கே நிறுத்துவது?

கோண்டாவில், வெள்ளி

காங்கேசன்துறை வீதியில் பஸ் நிறுத்துவதற்கான குறிகள் இல்லாத காரணத்தால் பிரயாணிகள் மிகவும் கஷ்டமடையவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. பிரயாணிகள் மட்டுமின்றி இப்பாதையில் புதிதாகக் கடமையாற்றவரும் இ. போ. ச. சாரதிகள் கஷ்டப்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பிரயாணிகள் இறங்குவதற்கான அறிவிப்பு மணியை அடித்ததும் நிறுத்தும் இடமறியாத சாரதிகள் அவ்விடத்தைத் தாண்டிச் செல்ல நேரிடுவதாக அறியப்படுகிறது. முன்பு இப்பாதையின் பல்வேறு இடங்களில், போக்குவரத்துச்சபையினர் வீதியில் நிறுத்துங் குறியை இட்டனர். இக்குறிகள் மழை காரணமாகவும், வாகனப் போக்குவரத்துக் காரணமாகவும் அழிந்துவிட்டதாலேயே இவ்வித நிலை ஏற்பட்டுள்ளது.

## இடவசதிபற்றி புதிய திட்டம்

பம்பலப்பிட்டி. வெள்ளி

சர்வகலாசாலைக்குப் புதிதாகச் சேரவிருக்கும் மாணவர்களுக்கு உடனடியாக இடவசதி முதலியன கொடுக்கப்படவேண்டுமென்ற கருத்தை சர்வகலாசாலை நிர்வாகிகள் உணர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ள இருப்பதாகத் தெரியவருகிறது.

சர்வகலாசாலையின் ஜி. சி. ஈ. உயர்தர சோதனைக்கு இவ்வருடம் 32.000 மாணவர்கள் தோன்றுவார்கள் என்றும், அதில் 800 பேர்கள் சர்வகலாசாலையில் படிப்பதற்கு தகுதியுடையவராவார்களென்றும் சர்வகலாசாலை உபவேந்தர் அறிவித்துள்ளார்.

## ரஷ்ய திட்டம் கிடைத்தது

புதுடில்லி, டிச. 10

பொக்காரோ எஃகு ஆலை அமைப்புத் திட்டம் ரஷ்யாவிடமிருந்து இங்கு கிடைத்திருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

## மந்திரிக்கு வர்த்தகர் மகஜர்

பம்பலப்பிட்டி, வெள்ளி

அரசாங்க வர்த்தக கூட்டு ஸ்தாபனம் ஸ்தாபிக்கப்படுவதால் வாழ்க்கைத்தரம் குறையுமென்று எண்ணுவது சரியான கருத்தல்ல. பொருட்களை இறக்குமதி செய்யும் வர்த்தகர்களும் பொதுமக்களும், தனியார்துறை வியாபாரிகளும் ஒன்றுசேர்ந்து நடவடிக்கை எடுப்பதன் மூலமே இதற்கு ஒரு வழி காண முடியும் என்ற அடிப்படையில் தனியார்துறை வர்த்தகர்கள் மகஜரொன்றை வர்த்தக மந்திரிக்கு சமர்ப்பித்துள்ளார்கள்.

## இடமாற்றம் தடைசெய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

1960-ம் ஆண்டு அக்டோபருக்குள் சுவீகரிக்கப்பட்ட பாடசாலைகளில் நியமனம் பெற்ற ஆசிரியர்களை வெளியிடங்களுக்கு மாற்றக்கூடாதென்றும், தென்னிலங்கையிலுள்ள ஆசிரியர் பற்றாக்குறையையும் வடஇலங்கையின் மேலதிக ஆசிரியர் தொகையையும் திட்டவட்டமான புள்ளிவிபரம் எடுக்காமல் வடபிரதேசத்தில் அடுத்த ஆண்டுதொடக்கம் நடைபெறவிருக்கும், இடமாற்றத்தை கைவிட்டும் இதனை தடைசெய்யுமாறும் கோரும் தீர்மானங்கள் வலிகாகம் கிழக்குத் தமிழாசிரியர் சங்கத்தின் விசேஷ பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

இத் தீர்மானங்கள் கல்வி மந்திரிக்கும் பாராளுமன்ற பிரதிநிதிகளுக்கும் வித்தியாதிபதி ஆகியோர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## ஆரிப் மத்தியஸ்தம்

பாக்தாத், டிச 10

இந்திய—பாகிஸ்தான் தகராறில் மத்தியஸதம் செய்ய ஈராக் அதிபர் ஆரிப் முன்வந்திருக்கிறார். இவ்விஷயமாக அரபுநாட்டு அரசாங்கத் தலைவர்களை தாம் அழைக்கப்போவதாய் அவர் கூறியிருக்கிறார்.

## கி. ச., பட்டினசபை நெருக்கடி

பருத்தித்துறை, வெள்ளி

நெல்லியடிப் பட்டினசபை கட்டைவேலி கிராம சபை ஆகியவற்றின் வரவு-செலவுத்திட்டங்கள்நிறைவேற்ற முடியாத நிலைமைஉருவாகி வருவதாகத் தெரியவருகிறது.

தற்போதைய தலைவர்கட்கு எதிரான கோஷ்டியில் மேலதிக அங்கத்தவர்கள் இருப்பதே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

கட்டைவேலிக் கிராம சபையில் மொத்தம் 11 அங்கத்தவர்களில் எட்டுப்பேர் எதிர்க்கோஷ்டியில் உள்ளனராம். இதனால் பல கூட்டங்கள் சென்றகூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டதுடன் நிறுத்தப்பட்டுவிட்டதாயும் கூறப்படுகிறது.

இந்தச் சபைகளில் ஏற்பட்டுள்ள இந்நெருக்கடி நிலைமைபற்றி உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் கவனத்துக்குக்கொண்டுவரப் பட்டிருக்கிறதாம்.

இதன் காரணமாக இச் சபைகளின் அத்தியாவசிய தேவைக்கான பணத்தையோ, நன்கொடைகளையோ பெறுவதிலும் கஷ்டம் ஏற்பட்டுள்ளதாம்.

## பாடசாலைப் பெயர்மாற்றம்

சாவகச்சேரி, வெள்ளி

யாழ்ப்பாணம் வாதரவத்தை மெதடிஸ்த மிஷன்தமிழ்க்கலவன் பாடசாலையின் பெயரை 'விக்னேசுவர வித்தியாலயம்' என மாற்றுமாறு மேற்படி பாடசாலைப் பெற்றோர்-ஆசிரியர் சங்கம் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை மூலம் வித்தியா பகுதியினரைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க அடுத்த வருடம் முதல் திகதியிலிருந்து மேற்படி பாடசாலையின் பெயர் மாற்றப்பட்டு விக்னேசுவர வித்தியாலயம் என்ற பெயருடன் வழங்கப்படுமென வடபிரதேச உதவிவித்தியாதிபதி குறிப்பிட்ட பாடசாலைத்தலைமை ஆசிரியருக்கு அறிவித்துள்ளார்.

## கிராம சேவையாளர் சேவை

பம்பலப்பிட்டி, வெள்ளி

சட்டவிரோதக் குடியேற்றக் காரரைக்கண்டுபிடித்துதவுவதில் வடபகுதியிலுள்ள கிராம சேவையாளர்கள் ராணுவத்தினருக்கு உதவி செய்ய முன்வந்துள்ளதாகத் தெரியவருகிறது.

தென் பகுதியிலுள்ள மீனவர்களும் சட்ட விரோதக் குடியேற்றக்காரரைக் கண்டுபிடித்து உதவிசெய்ய ஆயத்தமாய் இருப்பதாக ராணுவ அதிகாரி ஒருவர் அறிவித்துள்ளார்.

## நாவலர் குருபூஜை

பம்பலப்பிட்டி, வெள்ளி

கொழும்பு விவேகானந்த சபையினர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூஜைவிழாவை இம்மாதம் 11 ந், 12-ந் திகதிகளில் சிறப்பாக சபை மண்டபத்தில் கொண்டாடுவர்.

நாளைமாலை ஆரம்பமாகும் நிகழ்ச்சிகளுக்கு திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை தலைமை தாங்குவார். ஞாயிற்றுக்கிழமை காலை நிகழ்ச்சிகளுக்கு திரு. ஆ. கந்தையாவும் மாலை திரு. மு. வயிரவப்பிள்ளையும் முறையேதலைமை தாங்குவார்கள்.

## கந்தபுராண படிப்பு பூர்த்தி விழா

மீசாலை, வெள்ளி

மீசாலை தெற்கு சித்திர வேலாயுதப் பெருமான் கோவிலில் கந்தபுராணப் படிப்பு பூர்த்தி விழா முடிவடைந்தது. திரு. வினசித்தம்பி, புலவர் அப்பாக்குட்டி ஆகியோர் பயன் சொன்னார்கள். இவ்விழாவில் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## சாரதாதேவி ஜயந்தி

பம்பலப்பிட்டி, வெள்ளி

ஸ்ரீ சாரதாதேவியின் 113 வது ஜயந்தி இம்மாதம் 14 ந் திகதியும் 19 ந் திகதியும் இராமகிருஷ்ண மண்டபத்தில் கொண்டாடப்படவிருக்கிறது. இவ்வைபவத்தின்போது பலர் சொற்பொழிவாற்றவிருக்கிறார்கள்.


மொரட்டுவ தளபாடங்களுக்கு பெயர்பெற்ற இடம்

அதைவிட, நியாயமான விலையில் தரம் சிறந்த தளபாடங்களை வாங்குவதற்கு புகழ் பெற்ற இடம்

**எம். எஸ். பெர்னண்டோ அன் கோ**

விருந்தை தொடக்கம் குசினி வரைக்கும் அழகு கொடுக்கும் நூற்றுக்கணக்கான மாதிரிகளில் உள்ள தனி, செட் தளபாடங்களில் உங்கள் கண்ணைக் கவரும் ஒரு செட்டைத்தான் கீழே காண்கிறீர்கள்.



நடுவிலே ஒரு மேசையுடனும், அருகில் இரு ஸ்டூல்களுடனும் உல்லாசம் தரும் ஐந்து கதிரைகளுடன் கூடிய

எந்தவீட்டுக்கும் எழில்தரும் இந்தச் செட்டின் விலை 375 ரூபாவே தான்

**இன்றே விஜயம் செய்யுங்கள் !**

**எம். எஸ். பெர்னண்டோ அன் கோ,**

இல. 32, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

110 காலி வீதி, மொரட்டுவ, இல. 4, இன்டிபெட்டா, மொரட்டுவ.






வாதம், சளுக்கு, தசைவலி. தலைவலி, மார்ச்சளி, பல் முதலிய உபாதைகளுக்கு இணையற்ற நிவாரணி.

தயாரிப்பாளர்கள் :

விட்டில்ஸ் ஓரியண்டல் பாம் & பார்மஸிடிக்கல்ஸ் லிமிடெட்.,
மதராஸ்—2, இந்தியா.
சரும வியாதிகளுக்கு நிவாரணியான ஜெர்மெக்ஸ் தயாரிப்பவர்கள்

ஸோல் ஏஜெண்டுகள் :

A. V. R. A. & கம்பெனி,
தபால் பெட்டி எண் 711,
கொழும்பு—11.

''கல்கத்தாவிலுள்ள கெமிகல்ஸ் அண்ட் அலைட் ப்ராடக்ட்ஸ் எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சிலால் வெளியிடப்பட்டது.''


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### யாழ்ப்பாணம் மாநகரசபை
### 1965-ம் ஆண்டின் 1-வது அநுபந்தவரவுசெலவுதிட்டம்

இலங்கை சட்டநிர்ணயத்தின் 1956-ம் ஆண்டின் (214) (2) (b)பிரிவின்252-ம் அத்தியாயத்துக் (மாநகர சபை விதிகள்) கிணங்க யாழ்ப்பாணம் மாநகரசபையின் 1965 ம் ஆண்டின் முதலாவது அநுபந்த வரவு செலவுத் திட்டம் பொது மக்கள் பார்வைக்காக மாநகரசபைக் கந்தோரில் 1965 டிசம்பர் மாதம் 15-ம் திகதி தொடக்கம் ஏழுநாட்களுக்கு வைக்கப்படும் என்பதை இத்தால் தெரியப் படுத்துகிறேன்.

(ஒப்பம்)
எஸ். ஸி. மகாதேவா
மாநகரசபை முதல்வர்.
மாநகரசபைக் கந்தோர்.
யாழ்ப்பாணம்.
2-12-65. 1295

### யாழ்ப்பாணம் மாநகரசபை
### வரவுசெலவுத் திட்டம் 1966

இலங்கைசட்ட நிர்ணயத்தின் 1956-ம் ஆண்டின் 212(b) பிரிவின் 252 ம் அத்தியாயத்துக் (மாநகர சபை விதிகள்)கிணங்க யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு 1966.ம் ஆண்டில்கிடைக்கக் கூடிய வருமானம். குறிப்பிட்ட வருடத்தின் உத்தேச செலவு ஆகிாவற்றின் விபரங்கள்யாழ்ப்பாணம் மாநகரசபைக் காரியாலயத்தில் 1965ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ந் திகதி தொடக்கம் ஏழு நாட்களுக்குபொது மக்கள் பார்வைக்காக வைக்கப்படும் என்பதை இத்தால் தெரியப்படுத்துகிறேன்.

(ஒப்பம்)
எஸ். ஸி. மகாதேவா
மாநகரசபை முதல்வர்
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
3-12-65 1294


பம்பலப்பிட்டி, வெள்ளி
தற்பொழுது நடந்துவரும் டிசம்பர் மாத ஜி. ஸி. ஈ. (சாதாரண) பரீட்சையின் ஆங்கில மொழிப் பரீட்சையைமீண்டும் டிசம்பர்மாதம் 24-ந் திகதி நடத்துவதென பரீட்சைக் கமிஷனர் திரு. எஸ். எல். விமலசூரிய முடிவு செய்துள்ளார்.




## கலால் இலாகா கோஷ்டி வெற்றி

யாழ்ப்பாணம், சனி
யாழ். மாவட்ட விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் அரசாங்க சேவையாளர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியின் இரண்டாவது போட்டியில் சிறைச்சாலைக் கோஷ்டியும் கலால் இலாகாவும் மோதிக்கொண்டன. ஆரம்பத்தில் இருந்து முடியும் வரை போட்டி விறுவிறுப்பாகவும் ரசிப்பாகவும் காணப்பட்டது. இடைவேளைக்குமுன் நடந்தபோட்டியில் முதலாவது கோலை கலால் இலாகா கோஷ்டி போட்டது. சிறைச்சாலைக் கோஷ்டியின் முன்னணிவீரர்கள் பலதடவை கோல்கள் போடுவதற்கு முயற்சித்தார்கள்எனினும்எதிர்க்கோஷ்டியின்கோல் ,காப்பாளர் தடுத்துவிட்டார். இடைவேளைக்குப்பின் நடந்த விளையாட்டில் சிறைச்சாலைப் பகுதியினர் முதன்முதலில் ஒரு கோலைப் போட்டனர். பின்னர் இவர்கள் எதிர்பாராத விதமாக கலால் இலாகாக் கோஷ்டியினர் அடுத்து இன்னுமொரு கோலைப் போட்டனர். இரு கோஷ்டியினரில் கலால் கோஷ்டியின் கோல் காப்பாரான பொன்னம்பலாறை பாராட்டுக்குரியவரானர், இக்கோஷ்டியின் முன்னணிவீரரான ரெத்னயக்காவின் விளையாட்டும் ரசிக்கும்படியாகவிருந்தது. இப்போட்டி முடிவில் கலால் இலாகாக் கோஷ்டி 2—1 கோல்கள் பெற்று சிறைச்சாலைக்கோஷ்டியைத் தோற்கடித்தது கோட்டை மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. ஏ. செபஸ்தியாம்பிள்ளை மத்தியஸ்தம் வகித்தார்.

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், சனி
குரும்பசிட்டி உதயதாரகை மன்றம் நடத்தும் 8-வது வருட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று ஆரம்பமாகின்றது. மேற்படி மன்றத்தினரின் இச் சுற்றுப் போட்டியில் 1-ம் பிரிவு 2.ம் பிரிவு ஆகிய பிரிவுகள் கலந்துகொள்ளும். 1-ம் பிரிவில் ஈவினை பறக்கும் இளைஞர், கட்டுவன் பாலர் ஞானோதயா, தையிட்டி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் மாவிட்டபுரம்யுனைட்டெட், பண்டத்தரிப்பு வை. எம். ஸி. ஏ, கே. கே. எஸ். நடேஸ்வரன் விளையாட்டுக் கழகம், குப்பிளான் சனசமூக நிலைய விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம், ஏழாலை யுனைட்டெட், குரும்பசிட்டி உதயதாரகை, அச்சுவேலி இளைஞர்சங்கம் ஆகிய கழகங்களும், 2-ம் பிரிவில் குப்பிளான் சனசமூக நிலைய விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம், கட்டுவன் பாலர் ஞானோதயா, தெல்லிப்பளை ஒலிம்பிக், ஊரங்குணை விவேகானந்தா, போயிட்டி விளையாட்டுக்கழகம், சுன்னுகம் டையனு, பண்டத்தரிப்பு அந்தனீஸ், மாவிட்டபுரம் யுனைட்டெட், மல்லாகம் யினைட்டெட், தெல்லிப்பளை றேயல் (ஆர்), சிறுவிழான் ஞானோதயா, ஆகிய கழகங்களும் பங்குபற்றுகின்றன. மேற்படி போட்டிகள் யாவும் பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை மைதானத்தில் நடைபெறும்.

## கல்விப்பகுதி வெற்றி

யாழ்ப்பாணம், சனி
வடமாகாண விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் எதிர்பாராதவிதமாகக் கல்விப்பகுதி வெற்றியடைந்தது. பூநகரிப்பகுதி இராணுவத்தினருக்கும் கல்விப் பகுதிக்கும் நடைபெறவிருந்த இப்போட்டியில் இராணுவத்தினர் சமூகம் கொடுக்காத காரணத்தினுல் பலரும் எதிர்பார்த்த ஒரு சிறந்த கைப்பந்தாட்டப் போட்டி இடம் பெருது போயிற்று. மத்தியஸ்தர் திரு. ஈ. கே. குமரையா, கல்விப்பகுதிக் கோஷ்டி வெற்றியெனத் தீர்ப்பளித்தார்.


**The School of Technology, Chundikuli, Jaffna.**

All Courses of Studies hitherto provided by this School will from 1st, January 1966 be undertaken by the Jaffna Academy, Chundikuli, Jaffna. Intending applicants should communicate with the Director of that Academy.

Director.



## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கண்ணைக் கவரும் டிசைன்களில் தமிழ்-ஆங்கில 'கிறிஸ்மஸ்புதுவருட கார்ட்டுகள்' தொகையாவும் சில்லறையாகவும் எம்மிடம் மலிவாக பெற்றுக்கொள்ளலாம். பவன் ஆட்ஸ், மொம்லாக் பில்டிங்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1474

### வாடகைக்கு அல்லது விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள 'சிங்கப்பூர் கபே' இல: 406, 3 மாடியுள்ள கடை வாடகைக்கு அல்லது விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: க. நாகமுத்து, கருங்காலி, காரைநகர். 1448

### தேவை

6 மணித்தியாலம் வேலை செய்வதற்கு ஒரு கெசியர் தேவை. பிணைப்பணம் ரூபா 1000 கட்டக்கூடியவர் விண்ணப்பிக்கவும். சன்லையிட் டையேஸ் அன் றைக் கிளீன்ஸ், ராணி தியேட்டருக்கு அருகாமையில். பெரியகடை, யாழ்ப்பாணம். 1472

கைத்தறி நெசவு செய்வதற்கு சகல வசதிகளுடன் கூடிய ஒரு பெரிய வீடு வாடகைக்குத் தேவை. இணுவில் நல்லூர் எல்லைக்குள் இருத்தல்வேண்டும். எழுத்து மூலம் விளம்பர இல: 1475, ஈழநாடு மேற்பார்த்து விண்ணப்பிக்கவும். 1475

தட்டச்சுக்கள் (றெமிங்ரன்) தமிழ், ஆங்கிலம் தேவை. விண்ணப்பிக்கவும்: ஐ. நடராசா, நம்: 2. வைரவகோவில் வீதி, வண்ணர்பண்ணை. 1476

### வைத்தியம்

தொய்வு, சுசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.





## கொழும்பு
### சனி 11-12-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-00துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்தஇசை, 7-45 திரை இசை, 8-15இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-15 இளைஞர்மன்றம், 5-45 படப்பாட்டுக்கள்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கண்டதும்கேட்டதும் (செய்திச்சுருள்) 7-00 இசைக்கச்சேரி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 உரைச்சித்திரம், 10-00 நேயர் விருப்பம்.

### ஞாயிறு 12-12- 65

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-000)

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைநற்சிந்தனை, 6-55

(3-ம்கலம் பார்க்க)

(4-ம் கலத் தொடர்ச்சி)

கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-00 குரல்வகை, 7-45 தமிழோடிசை பாடல், 8-00 பௌத்த வாசம், 8-15 ஞானமிர்தம்.

344 மீ. & 49 மீ.

8-30 முத்திநெறி, 9-00 உரைச் சித்திரம், 9-30 கிறிஸ்தவ கீதங்கள், 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 குதூகலம்—தொழிலாளர் நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு 5-45 திரைகானம்.

இரவு 6-10 வாத்திய இசை, 6-15 தாளவாத்தியக் கச்சேரி. 6-45 வீணை, 7-00 பாட்டு, 7-30 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 [illegible] நிகழ்ச்சி, 9-45 மாதர் கேட்டவை, 10-15 தேர்ந்த இசை

## சீனர் அமைக்கும் சாலைகள்

புதுடில்லி, டிச. 10
பாரத எல்லையில் சீனர் மேலும் இரண்டு முக்கிய சாலைகளை அமைத்திருக்கிறர்கள் என்றும் எல்லாவித ராணுவ போக்குவரத்துக்களையும் இவற்றின் மூலம் நடத்தமுடியும் என்றும் அறிவிக்கப்படுகிறது. ஒன்று சிக்கிம் எல்லையிலும், மற்றென்று பூட்டான்—இந்தியா— திபேத் சந்திப்பு முனையிலும் அமைக்கப்பட்டிருக்கிறது.

மூன்ருவது புதிய சாலை ஒன்று அமைக்கப்பட்டுவருகிறதென்றும், அது விரைவில் பூர்த்தியுறும்நிலையில் இருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

அதற்கிடையில் சீனுவில் உள்ள பிரதான ராணுவத் தளங்களைத் தொடர்புபடுத்தும் ஏராளமான சாலைகள் திபேத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

லாஸாவுக்கு 1300 மைல் நீளம் நல்ல சாலை ஒன்றை சீனர்கள் அமைத்திருக்கிறர்கள்.


## கிறிஸ்மஸ் பண்டிகையா?

செலவின் கவலைகளை சிதறடியுங்கள்
அரிய சந்தர்ப்பம் - நழுவவிடாதீர்கள்!

# டயரும்ஸ்
## மலிவு விற்பனை

| | | | |
|---|---|---|---|
| துவாய்கள் | | 1-30 | மேல் |
| தலையணை உறைகள் | | 3-25 | ,, |
| மெத்தை விரிப்புகள் | | 9-50 | ,, |
| வெள்ளை லோங்குளோத் | 42" | 1-60 | மேல் |
| நிற ஷீடிங் | 48" | 4-25 | |
| யன்னல் துணி இந்தியன் றெப் | | 3-75 | மேல் |

உங்கள் வீடுகளை அலங்கரிக்க
இன்றே வாங்குங்கள்
**பிளாஸ்டிக் கதிரைகள்**
விசேஷ விலை இறக்கம் 59-50 மேல்

54-60, பெரிய தெரு, யாழ்ப்பாணம்.





உங்கள் தேவைகளை
பூர்த்தி செய்துகொண்டீர்களா?
நத்தார் - புத்தாண்டை
முன்னிட்டு
நடைபெற்றுக்கொண்டிருக்கும்
எமது

## மலிவு விற்பனை

மூலம்
பூர்த்தி செய்துகொள்ளுங்கள்!

| | | |
|---|---|---|
| கண்ணுடி அலுமாரி | 300-00 | 250-00 |
| சைனு கபினற் (தேக்கு+முதிரை) | 150-00 | 115-00 |
| டபிள் ஆம் செயர் (பிளாஸ்ரிக்) | 40-00 | 35-00 |
| 9" கதிரை (பிளாஸ்ரிக்) | 15-00 | 13-50 |
| 6" கதிரை (பிளாஸ்ரிக்) | 11-00 | 8-75 |

மற்றும்
உங்களுக்குத் தேவையான எல்லா தளபாடங்களும் வெகுவாக விலை குறைக்கப்பட்டிருக்கிறது.

# பாஷன் பேணிஷிங் பலெஸ்
(தளபாட மாளிகை)
5-7, ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் இடமாற்றம் பற்றி பரிசீலனைகுழு

## உதவி வித்தியாதிபதி, எம்.பிக்கள் மகாநாட்டில் ஆலோசனை

யாழ்ப்பாணம், வெள்ளி

இடமாற்றத்தினுல் ஆசிரியர்களுக்கு ஏற்படும் தனிப்பட்ட கஷ்டங்கள் பற்றிப் பரிசீலனை செய்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்க ஒரு பரிசீலனைக்குழு நியமிக்கப்பட வேண்டுமென நேற்றுக்காலை வடபிரதேச உதவி வித்தியாதிபதி, கல்வி இலாகா உயர் அதிகாரி ஆகியோருடன் வடபகுதி எம். பி. க்கள் சிலர் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் அபிப்பிராயம் வெளியிடப்பட்டது.

வடபிரதேச உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம், கல்வி இலாகாவைச் சேர்ந்த உயர் அதிகாரி திரு. சந்திரசேகரம், கோப்பாய் எம்.பி' திரு. எஸ். கதிரவேற்பிள்ளை, ஊர்காவற்றுறை எம். பி. திரு. வ. நவரத்தினம். உடுவில் எம். பி. திரு. வி. தருமலிங்கம் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

வட மாகாணத்திலிருந்து இடமாற்றம் செய்யப்படும் ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டஇடத்தில்இரு வருடங்களுக்குக் குறையாமலும் நான்குவருடங்களுக்கு அதிகரிக்காமலும் கடமையாற்றி வடபகுதிக்கு மீண்டும் வர உத்தரவாதமளிக்கப்படவேண்டுமென எம். பிக்கள் வற்புறுத்தினர்.

இந்த ஆலோசனைகளை மேலிடத்திற்கு தெரியப்படுத்துவதென முடிவுசெய்யப்பட்டது. (ந. நி,)

## யாழ்மாநகரசபை கமிஷனராக செல்வராஜா பதவியேற்ருர்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மாநகர சபையின் புதிய கமிஷனராக திரு. ஹட்சன் செல்வராஜா நேற்று பதவியேற்ருர்.

கமிஷனர் சமீ இடமாற்றம் செய்யப் பட்டதைத் தொடர்ந்து திரு. செல்வராஜா இப் பதவியை ஏற்றுள்ளார்.

மேயர் திரு. எஸ். சி. மகாதேவா மற்றும் மாநகர சபை அங்கத்தவர்கள், மாநகரசபை ஊழியர்கள் ஆகியோர் திரு. செல்வராஜா கமிஷனராகப் பதவி ஏற்றதற்கு தமது பாராட்டுதல்களைத் தெரிவித்தனர்.

கணக்காளராகப் பதவி வகித்துவந்த திரு. ஹட்சன் செல்வராஜா கமிஷனராசப் பதவி உயர்வு பெற்றுள்ளதைத் தொடர்ந்து யாழ்ப்பாணமாநகரசபையின் கணக்குப்பகுதி சிரேஷ்ட லிகிதரான திரு. சி. முத்துத்தம்பி தற்காலிகமாக கணக்காளர் கடமைகளைச் செய்துவருகிருர். (ந. நி.)

## பல்கலைக்கழக மாணவர் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

கொழும்பு, வியாழன்

பேராதனை, கொழும்பு ஆகிய இடங்களிலுள்ள பல்கலைக்கழக மாணவர்களும் வித்தியோதய பல்கலைக்கழக மாணவர்களும் நடாத்திய பகிஷ்கரிப்பு வேலை நிறுத்தத்தை இன்று பிற்பகல் 2 மணிக்கு கைவிட்டனர்.

பல்கலைக்கழக உபவேந்தர் சேர் நிக்கலஸ் அட்டிகலையிற்கும் பல்கலைக்கழக மாணவர்கள் பிரதிநிதிகளுக்குமிடையில் நடைபெற்ற மகாநாட்டின் பின்னர் வேலைநிறுத்தத்தைகைவிடும்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுஎன அறிவிகப்பட்டுள்ளது. கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல இந்த மகாநாட்டில் கலந்துகொண்டார்.

கொழும்பிலுள்ள பல்கலைகழகத்தில் 10 நாட்கள்வேலை நிறுத்தம் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசாங்க அதிபர் இரத்ததானம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியின் நடமாடும் இரத்தவங்கியினர், வங்கியின் தலைவர் டாக்டர் யோசேப் தலைமையில் யாழ்ப்பாணம் செயலகத்துக்குச் சென்றபோது யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா, யாழ்ப்பாண காரியாதிகாரி திரு. எஸ். சிவஞானம் ஆகியோர் உட்பட பல உத்தியோகஸ்தர்கள் இரத்ததானம் செய்தனர். (ந. நி.)


## வடமாகாண ஆசிரியர் சங்கம்

அவசர பொதுக்கூட்டம்

நிலையான திட்டமற்ற இடமாற்றத்தை எதிர்க்கும் நோக்கமாக நடைபெறும்.

காலம்:- 12-12-65 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணி,

இடம்:- மாநகரசபை மண்டபம், யாழ்ப்பாணம்.

அங்கத்தவர்கள் அனைவரும் தவருது சமுகமளிக்கவும்.

கொக்குவில் இந்துக்கல்லூரி, கொக்குவில், 8-12-65.

செ. குணபாலசிங்கம், பொதுச்செயலாளர், வ. மா. ஆ. சங்கம்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

## கணவனின் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கார் இல்லாத காரணத்தால் இ. போ. ச. பஸ்ஸில் சுமார் 5 மைல்களுக்கு அப்பால் உள்ள யாழ்ப்பாணத்துக்கு வந்து வாடகைக்கார் பிடித்து மண்டைதீவுக்குச் சென்றபோது அப்பெண்ணின் உயிரற்ற உடலையே காணமுடிந்தது.

காலஞ்சென்ற சிவஞானசுந்தரத்தின் மனைவியான 23 வயதுள்ள லட்சுமிஅம்மாளின் மரணவிசாரணையின்போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

தங்களின் ஒரேயொரு பிள்ளைமீது அதிக பாசம் வைத்த காரணத்தினுல், அப்பிள்ளையைச் சுடுதண்ணீருடன்விளையாடவிட்டதற்கு கணவன் தனது மனைவியைக் கண்டித்ததைத் தொடர்ந்து மனைவி கிருமிநாசினி அருந்த அதைப் பறித்து அருந்திய கணவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மரணமான சம்பவம் கடந்த மாதம் 9 ம் தேதி நடந்தது. அப்பொழுது கணவனுடன் ஆஸ்பத்திரியில் கவலைக்கிடமான நிலையில் அனுமதிக்கப்பட்ட மனைவி 5 தினங்களுக்குப்பின் சுகமாக மண்டைதீவிற்குத் திரும்பினுர்.

யாழ்ப்பாணம் நகரப் பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் மரணவிசாரணை நடத்தினுர். சின்னத்தம்பி சண்முகம் சாட்சியமளித்தபோது கூறியதாவது:-

இன்று நண்பகல் 12 மணிக்கு நான் எனது வீட்டு வாசலில் மற்ருெருவருடன் கதைத்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது காலஞ்சென்ற பெண் வீட்டு வளவைச் சுற்றிவிட்டு நிலத்தைக் கையினுல் தோண்டி, ஒரு போத்தலை எடுத்ததைக் கண்டேன். அப்போத்தல் மூடியைத் திறந்து, அதில் உள்ளதை அருந்தினுர்.

அது என்ன என்று நான் காலஞ்சென்றவரிடம் கேட்டபோது, 'நஞ்சு' என்று அவர் பதிலளித்தார். நான் ஓடிச் சென்று அப்போத்தலைப் பறித்து மணந்து பார்த்து 'நஞ்சு' என்பதை அறிந்துகொண்டேன்.

'தான் முதல் தடவையே தன் கணவனுடன் இறந்திருக்கவேண்டியவள் என்றும் ஆனுல் தனது விருப்பத்திற்கு மாருகக் காப்பாற்றப்பட்டுவிட்டதாகவும் கணவன் சென்ற இடத்திற்குச் செல்லவேண்டும்போல் தோன்றுகிறதென்றும் தனது ஒரு வயது குழந்தையைக் கடவுள் காப்பாற்றுவாரென்றும், தன்னைக் காப்பாற்ற முயற்சி எடுத்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லவேண்டாமென்றும் அவர் என்னிடம் கேட்டுக்கொண்டார். மண்டைதீவில் கார் இல்லாததால், நான் பஸ்ஸில் யாழ்ப்பாணம் சென்று காருடன் வந்தபோது அவர் மரணமாகிவிட்டார்.

காலஞ்சென்றவரின் தாயார் மாரிமுத்து சாட்சியமளிக்கையில், ஆஸ்பத்திரியிலிருந்து வந்தநாள் முதல், தற்கொலைசெய்யப் போவதாக பயமுறுத்தினுர் என்றும் கூறினுர்.

தற்கொலையென மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

பம்பலப்பிட்டி, வெள்ளி

பதுக்கிவைக்கும் வியாபாரிகள் மீதும் கூடுதலான விலைக்குப் பொருட்களை விற்பவர்கள் மீதும் தொடர்ந்து பொலிஸ் பகுதியினர் நடவடிக்கை எடுப்பார்கள் என்று பொலிஸ் அதிபர் திரு. [illegible] அறிவித்துள்ளார்.

## பிரம்மச்சாரியின் சடலத்தை எவரும் ஏற்க முன்வரவில்லை

கோண்டாவில், வியா.

வாழ்நாள் முழுதும் பிரமச்சாரியாக ஒரு மடத்தில் வாழ்ந்துவந்த ஒருவர் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலைசெய்துகொண்டார்.

இணுவத்தைச் சேர்ந்த 46 வயதான வீரசிங்கம் செல்வரத்தினம் என்பவரின் மரணவிசாரணையின் போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது. உடுவில் கோவில்பற்று திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. தாமோதரம்பிள்ளை மரண விசாரணை நடத்தினுர். விசாரணையின்போது இணுவில் கிராமசேவையாளரும் இருந்தார்.

இணுவில் கந்தசாமி கோவில் மடத்தில் செல்வரத்தினம் இறந்துகிடக்கக் காணப்பட்டார். அவர் அருகில் ஒரு நச்சுத்திராவகப் போத்தல் காணப்பட்டது.

பிரேத பரிசோதனை நடாத்திய டாக்டர் காலஞ்சென்றவரின் உடலில் நச்சுத்திராவகம் பரவியிருந்ததாகவும், அந்த நச்சுத்திராவகம் என்னவென்று திட்டவட்டமாகக் கூறமுடியாமல் இருப்பதாகவும் கூறினுர். இறந்தவரின் குடல் பரிசோதனைக்காக எடுக்கப்பட்டது.

இறந்தவரின் சடலத்தை எவரும் ஏற்க முன்வராததால் மரணவிசாரணை அதிகாரி அரசாங்கசெலவில் அடக்கம்செய்யுமாறு உத்தரவிட்டு தற்கொலைஎனத் தீர்ப்பளித்தார்.

## தற்காலிக நிரந்தரக்காரியதரிசி

பம்பலப்பிட்டி, வெள்ளி

கைத்தொழில்அபிவிருத்தி அதிபர் திரு. சி. மயில்வாகனம் கைத்தொழில் அமைச்சின் தற்காலிக நிரந்தரக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஆஸ்பத்திரியில் விளையாட்டு வீரர்

மாஸ்கோ, டிச. 10

உயரப் பாய்தலில் உலக ரிக்கார்டைக் கொண்டிருக்கும் 25 வயதான ரஷ்யவீரர் வெலரிபுரூமல் அடுத்த இரண்டு வருடங்களுக்கு விளையாட்டில் ஈடுபடமாட்டார். சென்ற மாதம் மோட்டார் சைக்கிள் விபத்தில் அவருக்கு கால் முறிவு ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் இருக்கிருர்.


REGAL—JAFFNA
NOW SHOWING
ELVIS PRESLEY
IN
GIRL HAPPY
(Panavision - M. G. M's Color)

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
எஸ். பாலச்சந்தர்
எல். விஜயலக்ஷ்மி
நடித்த
பொம்மை
தென்னகத்தில் 100 நாட்களுக்குமேல் ஓடி வெற்றி வாகை சூடிய திரைக்காவியம்!

8-வது வெற்றி வாரம்!
கிங்ஸலி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) லக்ஷ்மி (இரத்தினபுரி) சந்தியா (கம்பளை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2, 6, 9-30 மணிக்கு
தென்னுட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
(இருவேடங்களில்)
ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்னு, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி
நடித்த



விஜயா கம்பைன்ஸ்
எங்கவீட்டுப் பிள்ளை
(ஈஸ்மென்கலர்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org